**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 16–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**இ.ம.எண். 8/2023 இன் அ.வ.எண்.400/2007**

**CNR No. TNSA13-000106-2007**

பெரியசாமி . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மாவட்ட ஆட்சியர், சேலம்
2. வருவாய் கோட்டாட்சியர், ஆத்தூர்
3. வட்டாட்சியர், தலைவாசல்
4. தனி வட்டாட்சியர், mines சேலம்
5. கிராம நிர்வாக அலுவலர்,
   கோவிந்தம்பாளையம் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 16.09.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது தாவாவில் திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>

மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்துக்களை மனுதாரரின் தகப்பனார் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 55 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வந்து மேற்படி தாவா சொத்தில் ஆரம்பத்தில் கூரை வீடு கட்டியும், அதன் பின்பு மனுதாரர் தார்சு வீடு கட்டியும், மின் இணைப்பு பெற்றும் நீண்ட கால அனுபவத்தில் இருந்து வருவதாகவும், மேற்படி தாவா சொத்தில் ஒரு செந்தில்குமார் என்பவர் குவாரி தொழில் செய்ய வேண்டும் என்று மனுதாரரை தாவா சொத்தான வீட்டிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்ததாகவும், அவர் மீது மனுதாரர் அ.வ.எண்.167/2005 வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளதாகவும், பின்னிட்டு மேற்படி நபருக்கு உறவினர்கள் வருவாய்துறையில் அதிகாரிகளாக இருந்ததால் அவர்கள் மூலம் குறுக்கு வழியில் மனுதாரரை மிரட்டி தாவா சொத்திலிருந்து மனுதாரரை வெளியேற்ற முயன்றாகவும், எனவே வருவாய் அதிகாரிகளான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பெயரில் தாவா தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாவா வழக்குரையில் 55 வருடங்களுக்கு மேலாக தாவா சொத்தான வீட்டில் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாக மனுதாரர் கூறியுள்ளதாகவும், எனவே நீண்ட காலமாக தாவா சொத்தான எதிர்நிலை உடமையாளர் என்ற முறையில் தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோராமல் விடுபட்டுவிட்டதாகவும், வீடு அரசு புறம்போக்கு நிலத்தில் இருந்தாலும் 30 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்து மனுதாரருக்கு நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் உரிமையான சொத்து எனவும், மேற்படி தாவா பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் எனவும்,

எனவே மனுவில் கண்டுள்ளபடி தாவாவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்து 1, 2, 4, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். வாதி தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்தானது வாதியின் தந்தைக்கு 15.06.1968ம் தேதியில் அரசாங்கத்தால் டி கார்டு மலம் பட்டா வழங்கியதாகவும், மேற்படி தேதியிலிருந்து பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்தை அனுபவித்து வருவதாக 03.10.2007ம் தேதியில் வழக்கை தாக்கல் செய்துவிட்டு 16 ஆண்டுகள் கழித்து தாவா சொத்தானது தனக்கு எதிர்நிலை உடைமையாளர் என்ற முறையில் தற்பொழுது தாவாவை திருத்தம் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி தாவா சொத்தானது அரசு நிலம் என்றும், தாவா சொத்தில் வாதி ஒரு போதும் அனுபவத்திர் இருந்தது இல்லை என்றும், அரசு நிலத்தை அபகரிக்க் வேண்டும் என்ற எண்ணதில் தாவா சொத்து பட்டா மூலமாக பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு எதிர்நிலை உடைமையாளர் என்ற அடிப்படையில் தற்பொழுது தாவாவை திருத்தம் செய்தால் வழக்கின் உண்மை தன்மை மாறுபடும் என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர்/வாதி இந்த வழக்கை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். தாவாவில் வழக்கு சொத்தானது கோவிந்தம்பாளையம் கிராமம் தலைவாசல்

தாலுக்காவில் சர்வே எண்.11/2, 20/1ஏ, சர்வே எண்.17 ஆகிய எண்களில் அமைந்துள்ளதாகவும், மனுதாரர் /வாதியின் தந்தை தாவா சொத்துக்களை 55 ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமித்து அனுபவம் செய்து வருவதாகவும், அதனை அனுசரித்து மனுதாரர் / வாதியின் தந்தை பெயருக்கு 15.06.1968ல் 'டி' கார்டு பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தாவா சொத்தின் ஒரு பகுதியை அவரது தந்தை 18.11.1972 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 17.03.2003ல் மனுதாரர்/வாதி குடும்ப சொத்துக்கள் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தின் படி தாவா சொத்தானது வாதிக்கு ஒதுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அ.வ.எண்.167/2005 என்ற வழக்கை வாதி ஒரு செந்தில்குமார் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளதாகவும், மேற்படி செந்தில்குமாரின் தூண்டுதலின் பெயரில் இந்த தாவாவின் பிரதிவாதிகள் தாவா நிலத்திலிருந்து வாதியை வேளியேற்ற முயன்று வருவதாகவும் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தாவா சொத்தின் வீட்டில் 55 வருடங்களாக வாதியும் அவரது தந்தையும் அனுபவத்திலிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ள நிலையில் தற்பொழுது இந்த மனுவை தாவா சொத்தின் சர்வே எண்.17–லுள்ள க.எண். 2/96 என்ற வீட்டிற்கு விளம்புகை பரிகாரம் கோரி தாவாவை திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.17–லுள்ள வீட்டில் வாதியும் அவரது தந்தையும் 55 ஆண்டுகளாக அனுபவம் செய்வது குறித்து குறிப்பிட்டுள்ள காரணத்தால் தற்பொழுது மனுதாரர்/வாதி கோரும் இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை மாறாது என்பதாலும், பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 16–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.09.16 18:57:32 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

மனுதாரர்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.09.16 18:57:42 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 8/2023 இன்
அ.வ. எண். 400/2007
நாள் : 16.09.2025